சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08.

ந.க.எண். 3939 /ஆ6/2023 நாள். .05.2023

பொருள் பள்ளிக் கல்வி – 2023-2024 ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் திறப்பதற்கு முன்பு செய்ய வேண்டிய செயல்பாடுகள் மற்றும் இந்தக் கல்வியாண்டில் செயல்படுத்த வேண்டிய கல்விச் செயல்பாடுகள், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கல்விச் சாரா செயல்பாடுகள் சார்ந்து பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மற்றும் தொடக்கக் கல்வித் துறையின் இணைச் செயல்முறைகள், ந.க.எண்.019528/எம்/இ1/2023, நாள்.25.05.2023.

.....

2023-2024 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு ஜுன் 7ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் திறப்பதற்கு முன்பு செய்யப்பட வேண்டிய செயல்பாடுகள் , பள்ளி திறக்கும் நாளன்று செய்யப்பட வேண்டியது, திறந்த பின்பு நடைமுறைப்படுத்த வேண்டிய செயல்பாடுகள் குறித்து பார்வையில் காண் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மற்றும் தொடக்கக் கல்வித் துறையின் இணைச் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பள்ளித்தூய்மை, பாதுகாப்பு முன்னேற்பாடுகள், மாணவர் சேர்க்கை, வழங்கப்பட வேண்டிய நலத்திட்டப் பொருட்கள், கல்வி இணைச் செயல்பாடுகள், கல்விச் சாரா செயல்பாடுகள் , பள்ளிக் கால அட்டவணை/ பள்ளி நாட்காட்டி ஆகிய தலைப்புகளில் குறிப்பிட்டுள்ள அனைத்து அறிவுரைகளையும் தவறாது பின்பற்றுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு.

1. பார்வையில் காண் செயல்முறைகள்
2. 2023-2024 ஆம் கல்வியாண்டு நாட்காட்டி
3. பள்ளிக் கால அட்டவணை மாதிரி கட்டகம்

ஆர். சி. சரஸ்வதி 30/5/23

முதன்மைக்கல்வி அலுவலர்க்காக

சென்னை.

இணை 30/5/2023

பெறுநர்

1. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள், சென்னை மாவட்டம்.
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3 தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.

தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை மற்றும் தொடக்கக் கல்வித் துறையின்
இணைச் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண். 019528/எம்/இ1/2023, நாள். 25.05.2023.

பொருள்: பள்ளிக்கல்வி - 2023-2024ம் கல்வியாண்டிற்கு பள்ளிகள் திறப்பதற்கு முன்பு செய்ய வேண்டிய செயல்பாடுகள் மற்றும் இந்தக் கல்வியாண்டில் செயல்படுத்த வேண்டிய கல்வியியல் செயல்பாடுகள், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் சார்ந்து பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் - முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்க கல்வி) ஆகியோர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 163/பள்ளிக் கல்வி (ERT)த் துறை, நாள்.10.07.2017
2. பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்க கல்வி இயக்குரின் செயல்முறைகள் ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள். 11.06.2022.
3. தொடக்க கல்வி இயக்குரின் நேர்முக கடித எண்.007351/ஜெ2/2021 நாள்.08.10.2021

******

2023-2024ம் கல்வியாண்டில் 1 முதல் 12 வகுப்புகளுக்கு ஜூன் 7 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் திறப்பதற்கு முன்பு செய்யப்பட வேண்டிய செயல்பாடுகள் குறித்து கீழ்காணும் அறிவுரைகள் அனைத்து கல்வி அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**பள்ளித் தூய்மை**

- புதர்கள் மற்றும் குப்பைகளின்றி காண்பதற்கு அழகாகவும் தூய்மையாகவும் இருக்கும் வகையில் பள்ளி வளாகம் இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- பள்ளியில் உள்ள அனைத்து வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை, சமையலறை மற்றும் கழிப்பறைகள் நன்கு தூய்மைப்படுத்தப்பட்டு இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- திறந்த வெளிக் கிணறுகள் இருப்பின் அதை மூடிட நடவடிக்கை எடுத்து, பள்ளி தொடங்குவதற்கு முன்பாகவே மூடப்பட வேண்டும்.
- கழிவு நீர்த் தொட்டிகள் மூடப்பட்டு பாதுகாப்புடன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பள்ளி வளாகத்தில் பழுதடைந்த கட்டடங்கள் அல்லது உடைந்து விழும் நிலையில் சுற்றுச்சுவர் ஏதேனும் இருப்பின் மாணவர்கள் அங்கு செல்லாத வகையில் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை உறுதி செய்திடல் வேண்டும்.

- பள்ளி வளாகத்தில் மரங்கள் ஏதேனும் இருந்து அதனுடைய வேர்கள் வெளியில் தெரியும் வகையில் இருந்தால் அதனை மண் கொண்டு மூடுதல் வேண்டும். குழந்தைகள் விளையாடும் போது தடுக்கி விழாவண்ணம் ஏற்பாடுகள் செய்தல் அவசியமாகும்.

**மாணவர் சேர்க்கை**

- மாணவர் சேர்க்கை கொண்டாட்டம் அனைத்து பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கை பள்ளி திறந்த நாள் முதலே நடத்தப்பட வேண்டும்.
- குறிப்பாக தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பு சேர்க்கையை தீவிரமாக நடத்த ஆசிரியர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளி அமைந்துள்ள பகுதிகளில் பள்ளி செல்லும் வயதுடைய அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேர்ப்பதை உறுதி செய்திடல் அவசியம்.
- இல்லம் தேடிக் கல்வி தன்னார்வர்களால் கண்டு பிடிக்கப்பட்ட அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய நலத்திட்டங்கள்**

- பள்ளி திறக்கும் நாளன்றே மாணவர்களுக்கு தேவையான அனைத்து புத்தகங்களும் வழங்கப்பட வேண்டும்.
- முதல் பருவத்திற்கு வழங்கப்பட வேண்டிய நோட்டுப்புத்தங்கள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.
- மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.
- மேலும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து நலத்திட்ட உதவிகளும் பள்ளி திறக்கும் நாளிலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- 1 முதல் 5 வகுப்பு மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி குறித்த நேரத்திற்கு வழங்கப்படுவதை தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கென கற்றல் கற்பித்தல் முறைகளில் நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களான எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக் கல்வி, மாதிரிப் பள்ளிகள் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு உருவாக்கி

